Regd. No. M. 5685.



பொய்யாமொழி

ஆசிரியர் — ஈ. பாஸ்கரனார்.

MADRAS 225284

செய்யா மொழிக்குந் திருவள்ளுவர் மொழிந்த
'பொய்யா மொழி'க்கும் பொருளொன்றே —செய்யா

அதற்குரிய ரந்தணரே யாராயி னேனை
யிதற்குரிய ரல்லாதா ரில்.

கதிர் 1 } திருவள்ளுவர் ஆண்டு 1981 மார்கழி 12 (27—12—50) புதன்கிழமை. { மணி 18

எப்போ ?

புலவர். ப. அரங்கசாமி

காலையிலே கால்வயிற்றுக் கஞ்சி யுண்டுக்
கலப்பைதனைத் தோள்வைத்துக் கழனி சென்று
மாலைவரை உழுதிட்டு மண்ணைப் பூசி
மாட்டோடு வீடுவந்து மயக்க முற்று
ஓலையினல் கட்டியதோர் ஓட்டை வீட்டில்
ஓயாத உழைப்பாலே உள்ளம் சோர்ந்து
மூலையிலே முடக்கிட்ட உழவன் தானும்
முகமலர்ந்து வாழுகின்ற காலம் எப்போ ?

மண்வெட்டி தோளினிலே மாட்டிக் கொண்டு
மரம்வெட்ட அரிவாளும் கையில் ஏந்திப்
புண்பட்ட உளமோடு ஏதோ கொஞ்சம்
புசித்திட்ட உணவோடு புறத்தே சென்று
நண்பகலோ நடுயிரவோ என்றெண் ணுமல்
நாளெல்லாம் உழைத்திட்டு நலிவுற் ருங்கே
கண்சிறிதும் தூங்காது தொழில்செய் வோன்தன்
கவலையெலாம் நீங்கிடும்அக் காலம் எப்போ ?

பால்சோற்றைக் காலாலே உதைத்துத் தள்ளிப்
பசியில்லை எனவிம்மும் குழந்தை ஓர்பால்
தோல்வற்றி ஒருவேளை சோறென் றேங்கி
துயருற்று வாட்டமுறும் குழந்தை ஓர்பால்

மேலாடை தரைபுரளும் மேதை ஓர்பால்
மிகச்சிறிய கிழிந்தஉடைப் பேதை ஓர்பால்
ஓலமிடும் இக்காட்சி யாவும் நீங்கி
ஒன்ருன வாழ்வுபெறும் காலம் எப்போ ?

கடுங்கோடைக் கதிரவனின் வெப்பத் தாலே
காடெல்லாம் கரியாகும் நேரந் தன்னில்
நெடுங்கொல்லை அத்தனையும் நன்ருய்க் கொத்தி
நெஞ்சொடிய நீரிறைத்துத் திரும்புங் காலை
கடும்பசியால் தன் தலைவன் முகத்தை நோக்கிக்
கஞ்சிக்குப் பொருள்கொஞ்சம் கொடுங்கள் என்ருல்
கொடும்புலிபோல் பாய்ந்திடும்அத் தலைவன் கொண்ட
கொடியமனம் மாறுகின்ற காலம் எப்போ ?

அந்தகொடுங் காட்சியெலாம் அறவே நீங்கி
ஆனந்த வாழ்க்கையது நிலவ வேண்டில்
சொந்தமெனத் தமிழகத்தை நமக்கே யாக்கிச்
சுதந்திரமாய்க் குடியரசு அமைத்து, மற்றும்
வந்தவர்கள் போனவர்கள் யாரும் இங்கே
வடிகட்டிச் சுரண்டுவதைத் தடுப்போ மானல்
கந்தலுடை கால்வயிற்றுச் சோறு என்றக்
கவலையின்றி வாழ்ந்திடும்நாள் அதுவே யாகும்.

?.?.?

வார இதழ் விலை அணு 1

உரிமை நாடிய உத்தமன்

பொ. க. அரங்கராசன்.

★

உலகிலே ஒவ்வொரு நாடுகளும் ஒவ்வொரு காலத்தில் அடிமையிலும், அன்னியரின் ஆதிக்கத்திலும், அறியாமையிலும் உழன்று வந்திருக்கின்றன; வருகின்றன. அவற்றினின்றும் அந்நாடுகளை விடுவிக்க சிற்சில அறிஞர்கள் அவ்வப்பொழுது வழிகாட்டிகளாய் தோன்றியிருக்கின்றனர். அவர்கள் மக்கள் எண்ணங்களிலே உலவுவதன் காரணம் உள்ளத்திலொன்றும் உதட்டில் வேறுமில்லாததுதான். சொல்லும் செயலும் ஒன்றுபட்டமைதான்.

ரஷ்யாவுக்கு ஒரு லெனின்; அமெரிக்காவுக்கு ஒரு ஆப்ரஹாம் லிங்கன்; இத்தாலிக்கு ஒரு கரிபால்டி; "ஐரோப்பாவின் நோயாளி"என அழைக்கப்பட்ட துருக்கிக்கு ஒரு கெமால்பாஷா தோன்றினர். நாசகாரப் படுகுழியினின்றும் நாட்டை மீட்டு நல்ல நிலைமைக்குக் கொண்டுவந்தனர்.

ஆதிக்கவெறிபிடித்த ஆங்கிலேயர்கள் இந்தியாவிலே தங்கள் அதிகாரத்தை செலுத்தி வந்தபொழுத, உரிமை உணர்ச்சி கொண்ட உத்தமர்கள் சிலர் தோன்றினர். உத்தமர்களைத் தோற்றுவிக்கும் முயற்சியிலே தமிழகம் என்றும் பின்தயங்கியதில்லை இந்தசமயத்தில் மட்டும் விட்டுக் கொடுத்துவிடுமா என்ன? தோன்றினான் வீரபாண்டியன் அவன்தான்,

"வானம் பொழியுது, பூமி விளையுது
மன்னனென் காணிக்கு கிஸ்தி ஏது ?

என்று வீரம்பேசிய கட்டபொம்மன் மற்றொருவன் தனது கொடிக்காக தனது உயிரையே பணயம் வைக்கத் துணிந்த திருப்பூர் குமரன் இவர்கள் பட்டியலிலே திலகம் எனத்திகழ்பவன்தான் நமது கப்பலோட்டிய தமிழன் சிறையில்வாடிய வீரன்; செக்கிழுத்த செம்மல் நாட்டின் "உரிமை நாடிய உத்தமன்' வ. உ. சிதம்பரனார்

சிதம்பரனார் ஒட்டப்பிடாரத்தில் 1872ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 5ம் நாள் உலகநாதம்பிள்ளைக்கும் பரமாயி அம்மைக்கும் பிறந்தார்; ஆங்கிலமும் தமிழும் கற்றார்; வக்கீல் ஆனார்; வாழ்க்கை நடத்தினார்; இறந்தார் என்று முடித்துவிடும் தன்மைத்தல்ல அவருடைய வரலாறு. முடித்துவிட்டால் நாம் இன்று அவரை புகழ்வதிலும் பொருளில்லை. ஆனால் அவருடைய வாழ்க்கை வரலாறு படிப்போருக்கு அவரிடம் தன்னல மறுத்தல் கலங்காத நெஞ்சு, தன்னம்பிக்கை, ஈகைத்தன்மை. எது வரினும் இளகா உள்ளம். உறுதி மனப்பான்மை, தமிழ் பற்று, ஆகிய குணங்கள் மாணிக்கங்களெனப் புதைந்து கிடப்பது தெற்றெனப்புலனாகும்.

"வறுமையைநீக்கு, உரிமைக்குப்போரிடு, சிறைக்குச் சிறிதும் அஞ்சாதே" என்பன அவர்தம் உபதேசங்கள். உண்மையை பிறர்க்கு உணர்த்துவதில் ஒரு சிறிதும் அஞ்சார்; வக்கீல் தொழில் நடத்திய காலத்தும் தற்கால வக்கீல்களைப்போல் கையுட்டு (லஞ்சம்) முதலியன வாங்காது வாய்மையையே தனது கவசமாகக்கொண்டு பல வழக்குகளில் வாதிட்டு வெற்றிபெற்றார். மக்களுக்கு உரிமை உணர்ச்சி ஊட்டியதன் காரணமாக கண்ணனூர், கோவை முதலிய சிறைகளில் செக்கிழுக்க நேரிட்டபொழுதும் சிறிதும் கலங்கினாரில்லை இவர் ஒரு சிறந்த பாவலர் சிறையினின்று தமது குடும்பத்திற்கு பாவினாலேயே கடிதங்கள் எழுதினார், தமது மனைவிக்கு விடுத்த கடிதமொன்றில்,

"முக்கனியின் சாறெடுத்து முந்திரி, ஏலம், வாதம்
அக்காரம்; தேன், பாலொ(டு) அட்டூட்டக்;கக்குமென்று
கேழ்வரகின் கூழுண்ணல் கேடறியாய் நின்மலர்த்தாள்
வாழ்வதொக்கும் கற்காட்டில் வந்து."

எனக்குறிப்பிட்டிருக்கிறார். இவைபோன்ற இவரது பாடல்கள் கன்னெஞ்சினரையும் கரைக்கும் தன்மையவை

அன்னியரின் சுரண்டலைத்தடுத்து சொந்த நாட்டிலே உற்பத்தியைப் பெருக்க எண்ணங்கொண்டார். அவர் வற்புறுத்தும் சுதேசியம், பொருளில் மட்டும் நின்றுவிடாது கல்வியில் வாணிபத்தில், ஆட்சியில் ஏன்? வாழ்க்கையின் எல்லாத்துறைகளிலுமே கமழவேண்டும் என விருப்பங்கொண்டவர் பலகுடும்பங்களில் கைம்மைத்துயர் தாளாது கதறும் காரியங்களின் நிலைகண்டு மனங்கசிந்துருகுவார். தமிழில் மிகப்பற்றுள்ளவர். தமிழில் பல பண்டை நூல்களைக்கற்று நூல்கள் இயற்றி தமிழருக்கு உணர்ச்சி யூட்டியவர். கப்பல் கட்டுவதிலே தமிழர் எவருக்கும் தாழ்ந்தவரல்லர் என்பதற்கு எடுத்துக்காட்டாக, சூழ்ச்சி திறன்மிக்க ஆங்கிலேயருக்குப் போட்டியாக சுதேசிக்கப்பலை ஓட்டிக்காட்டினார். அவர் ஒரு தீர்க்கதரிசி! "கட்டுண்டோம், பொறுத்திருப்போம, காலம் மாறும்" என்று பாரதியார் கூறியதுபோல சிதம்பரனாரும் 1936ம் ஆண்டிலேயே, "கூடியசீக்கிரத்தில் உண்டாகும் உலக யுத்தத்தின்மூலம் இந்தியா சுதந்திரம் எய்வது திண்ணம்" எனக்கூறினார். இறக்கும் தருவாயிலும் பாரதியாரின் பாடல்களையே கேட்டுக்கொண்டிருந்தார் சுதந்திரத்தைக் காணக் கொடுத்துவைக்கவில்லையே என்பதுதான் அவரது கடைசி ஏமாற்றம்.

அவரது விருப்பம் இன்று நிறைவேறிவிட்டது. உழைப்பு அவருடையது பலன் நம்முடையது. ஆனால் அவருடைய விருப்பம் ஆங்கிலேயரிடமிருந்து சுதந்திரம் பெறுவது மட்டுந்தானா? இல்லையே. கல்வி, பொருளாதாரம் ஆட்சி முதலிய எல்லாவற்றிலுமல்லவா, சுதந்திரம் வேண்டினார். அவர் அன்றுகதறிய கைம்மைத்துயர் நீங்கிவிட்டதா? ஏழை பணக்காரன் என்ற நிலை இல்லையென்றதாகிவிட்டதா? மூடப்பழக்கவழக்கங்கள் ஒழிந்துவிட்டதா? இல்லையே. அவர்

—தொடர்ச்சி 3-ம் பக்கம் பார்க்க

பணக்காரர் யார்?

C. K. கோபாலன்

*

ஓரே ஒருகந்தல் வேட்டியினை உடையவன் ஒருகிழிவு படாத நல்ல வேட்டி வாங்கவேண்டுமென நவில்வதற்கு நாதிஎது? அப்படி உரைக்க உள்ளத்தில் 'உரு' விட்டது எது? உள்ளத்தில் உருவானவற்றிற்கு உறுதுணைஎது? வாழ்நாளில் அவன் வாழ்வை எந்தவகையில் வகுத்துவிட்டான்? அந்த வாழ்வு, வாடிடாது வளம்பெற வகுக்கும் முறையாது? அம்முறை முன்னணியில் நிற்க முயற்சிப்பது எது? அகத்தின் நிலைக்கு ஆடை அணிந்தவன் அபரித ஆடை அணிய அவாகொள்வதின் அந்தரங்கம் எது? வில்வண்டி பெற்றுள்ளவன் வகையானமுறையிலே நோகாது செல்லு 'வாக்சால்' காரினை கருத்தில் கருதி கவலைகொள்வது ஏன்? வாக்சாலரை விட்டு பாகாகச்செல்லும் பறக்கும் வானவூர்தியை வாழ்வில் விரும்புவது ஏன்? வானத்தில் வட்டமிட்டு விட்டமாகச்செல்லும் விமானத்தைவிட்டு வெறுப்பற்ற செயலை விருப்பாக கொள்வது ஏன்? என் எண்ணி சிந்திக்குங்கால் சிந்தனையினின்று சிதறிச்செப்பும் செல்வந்தன் யார்? என்பதை.

இதயத்தில் பெருக்கெடுத்தோடும் இரத்தம் விறுவிறுவென வியர்வையாய் வடிய; உடலில் உள்ள நாலாயிரத்து நானூற்று நாற்பத்தெட்டு (4448) நரம்புகளும் நலிய; எலும்பெல்லாம் வளைவுபட்டு வாட; தனக்கென வகுக்கப்பட் காலத்தினை வரம்பிடாது விசைமுடுக்கிய இயந்திரம்போல் இயங்க, உடலுருப்பு உழைத்து உருக்குலைந்து உழைப்பாளியின் உயர்வினை (திறத்தினை) ஓர் இடத்தில் இருத்தாததாலல்லவா! (சேமிக்க படாததாலல்லவா) கந்தல்வேட்டி கிழிவு பட்டு நல்ல வேட்டியாய் மாறும் நாளினை நோக்குவது. உழைப்பும் பங்குநிதியும் பாகுபடுத்துங்கால் பாரில் பரிதவிப்பு நிலை தோன்றுமா? அப்போது மக்களின் பேராதரவு பேச்சு எங்கே? என்ற வினாக்களை வீசும்போது உழைப்பும் பங்குநீதியும் பாகுபடுத்தும்போது அந்நாடு பண்பட்ட பயன்தக்க வாழ்வினை வகுக்கும். அங்குதான் மக்களின் பேராதரவு பேணும்.

நாட்டு மக்கள் பிணியும் வறுமையும் நையப்படாதென்றொரு நியதியும் கூறுமே என்ற ஆன்றோரின் வாக்குப்படி பிணியாலும் வறுமையாலும் வதைக்கப்படாதற்கு வாழ்வியல் கொள்பவன் வாழ்வில் வாழ்வை வகுத்தல்வேண்டும். அப்போது அந்நாட்டார் அமரராய் திகழ்வர், திகழுங்கால் திறமையால் திரவியம் பெறுவர் அந்நாடுதான் வளங்குன்றா வாகைசூடியநாடு அந்நாட்டார்தான் பொன்னாட்டாரென போற்றலுக்குரியவர். அவர்கள்தான் ஆக்கம் பெற்றவன் என அகமகிழ்ந்து பேசப்படுவன்.

பொருள் செல்வம் பெற்றவன் செல்வந்தன் என செப்பப்படுகிறான். அப்படி செப்புதற்கு செல்வம் ஏது? உலகில் உதிக்கும்போதே உடன் கொண்டுவந்தானா? உற்றாராலும், பெற்றாராலும் பெற்றானா? அப்படி பெற்ற செல்வத்தை சிந்தனைக்குட்படாது சேமிப்பதற்கு உறுதுணை எது? என்ற வினாவுக்கு விடை அளிக்குங்கால் அப்பழுக்கில்லாது அங்குதோன்றும் 1918ல் முஸோலினி இத்தாலியில் 'பாஸிஸம்' என்னும் கட்சியை தோற்றுவித்து அந்நாட்டின் ஆட்சியை தன் அதிகாரத்திற்குட்படுத்தி 1922ல் அதிகாரவர்க்கத்தால் அரியதொரு நிலையினை அடையும்படி செய்தான். பாஸிஸம் என்றால் தண்டத்தின் மூலம் ஆட்சிநடத்துவது அதுபோன்று நாட்டை அதிகாரவர்க்கத்தால் ஆட்சி நடாத்த தண்டத்தினை கருவியாக கொண்டதுபோன்று செல்வந்தன், சீமான் என்று செப்புதற்கு செயலாய் நிற்பது சிதறிய தொழிலாளியின் திறமே. அத்திறனை திறட்ட காளைப் பருவத்து பாட்டாளியும், கொழுத்த குருதிகொண்ட வரையும் தீப்பொரிபோன்ற திறனையும் (சுறுசுறுப்பு) தியாகம் செய்யச்செய்து திரண்ட திரவியத்தினைபெற்று திரவியனாக திகழ்கிறான். அப்படி திகழ்வதற்கு ஏதுவான பாட்டாளியினை படிப்படியாக பதம்பார்த்து பாழ்படுத்தி பணக்காரன் என்று பாரோரால் செப்புதற்கு செயல்பெற்றவனாய்விடுகிறான். இப்போது கூறப்பட்ட செல்வந்தனையும் முன் கூறப்பட்ட செல்வந்தனையும் ஒன்றுபடுத்தி, பாகுபடுத்தி பார்க்குங்கால் பணக்காரன் யார்? என்பது தெள்ளிய நிலையில் புலனாகும். ❁

பணக்காரர்

சி. சோமசுந்தரம்

○

பணக்காரர் பணியும் கடவுள் பணமே
பணக்காரர் கனவும் நனவும் பணமே
என்றும் பணத்தைக் குவித்துக் காப்பார்
அறம் வளர்க்காமல் மறம் வளர்த்திடுவர்
பணத்தைக் குவித்து தானும் உண்ணார்
புகழ் மதிப்பை நிலைபெறச் செய்யார்
இருப்புப் பெட்டியில் இருத்தி வைப்பர்
பணம் பணம் என்று காத்து
இன்பமாய் வாழார் எவர்க்கு மீயார்
அண்டி வந்தவரை அடித்து விரட்டுவார்
உயிர்நலம் வளர்க்கார் ஊனை வளர்ப்பார்
மமதையை யடக்கார் மன்னுயிர் ஓம்பார்
புலனை யடக்கார் பொய்ச்சான் றுரைப்பார்
களவும் கள்ளும் காமமும் நீக்கார்
அறமென கேட்பில் அஞ்சி நடுங்குவார்
இறுதியில் இழந்தேனென்று எண்ணைப்படுவர்
இவை போலின்னும் எத்தனைக் கோடியோ
இவ்விதம் நடப்பவர் என்றும் பணக்காரரே

-○-

2ம் பக்கத் தொடர்ச்சி

கண்ட தமிழகம்தானே. நாம் இன்று காண்பதும் வ. உ. சி. இன்றிருந்தால் 'அன்று நாங்கள் கண்ணீர் விட்டு வளர்த்த காங்கிரஸ் இந்த மோசமான நிலைக்கா வருவது' என்றல்லவோ கலங்குவார். எனவே நமதுநாடு மீண்டும் நல்லநிலைக்குவர சிதம்பரனாரே வழிகாட்டியாவர். அவரது உபதேசங்கள் ஒவ்வொன்றும் தமிழனின் இருதயகீதம் அவரது திறமைமிக்க பேச்சுக்கள் ஒவ்வொன்றும் மறத் தமிழனின் மூல மந்திரமாகும். தமிழர் உள்ளவரை, தமிழகம் உள்ளவரை சிதம்பரனாருக்கு நன்றிசெலுத்த ஒவ்வொரு தமிழனும் கடமைப்பட்டவனாவான். ஏனெனில் "செய்நன்றி கொல்லல்" செந்தமிழன் பண்பன்று.

ஓங்குக உரிமைநாடிய உத்தமனின் புகழ் ⊕

பொய்யாமொழி

ஆசிரியர்-ஏ.பாஸ்கரனார்

கதிர் 1 } 1981, மார்கழி 12 புதன். { மணி 18

"சிறப்பொடு பூசனை செல்லாது வானம்
வறக்குமேல் வானோர்க்கு மீண்டு"

வானம் வறக்குமேல் — மழைபெய்யாதாயின், வானோர்க்கும் — தேவர்களுக்கும் (வடவர்களுக்கும்) ஈண்டு இவ்வுலகத்திலே, சிறப்பொடு—(மக்களாலே செய்யப்படுகிற) திருவிழாவுடனே, பூசனை — பூசையானது, செல்லாது — நடவாது.

தமிழர் பண்பாட்டுக்குரியனவல்லாத பூசைபோன்ற காரியங்களை வடவர்களுக்கு செய்துவருகிற சில பழக்கங்கள்கூட மழையில்லையேல் அந்த கூடாத காரியங்களும் நின்றுவிடும் என்று கண்டனம் செய்கிறார்.

எவ்வாறெனில் மழைபெய்வது வருணன்போன்ற தேவர்களால்தான் என்று நினைத்துள்ள மக்களிடம் கண்டனத்துக்குரியதென சுட்டிக்காட்டுகிறார்.

வயதும் - வாக்குரிமையும்

★

அண்மையில் நமது இந்திய அரசியல் நிர்ணய சபையினரால் ஏற்படுத்தியுள்ள தேர்தல் முறையில் வயது வந்தவர்களுக்கு வாக்குரிமை வழங்கும் முறையில் செய்வதற்காக ஏற்படுத்தப்பட்ட சட்டமானது வயது வந்தவரெனில் 21 வயதுடையவர்கள் வாக்காளர் பட்டியலில் சேர்க்கப் ட்டுள்ளார்கள். அப்படி சேர்க்கப்பட்டிருக்கிறபோது நமது இந்திய உபகண்டத்தில் சற்றேறக்குறைய வாக்காளராக பதியப்பட்டவர்கள் 18 கோடிமக்களாகும். இதில் 21 வயது பூர்த்தியடைந்தவர்கள்தான் சேர்க்கப்பட்டுள்ளனர். ஆனால் நமது இன்றைய சட்டதிட்ட முறைப்படி 18 வயது பூர்த்தியானதும் மைனர் நீங்கி (மேஜர்) வயது வந்தவனாகக்கருதி சொத்துக்களை அனுபவிக்கவும், விற்கவும், வாங்கவும் குடும்ப பாரமேற்று நடத்தவுமுள்ள பொறுப்புக்கு வேண்டிய சகல உரிமைகளும் சட்டப்படி அளிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் ஓட்டுரிமைக்குமட்டும் 21 வயது பூர்த்தியடையவேண்டுமென்றிருப்பது எவ்வாறு நியாயமாகும்.

சிலர் நினைப்பதுபோல் 18 வயது பூர்த்தியானாலும் தேர்தலுக்குரிய பதவியின் பொறுப்பை நடத்திச்செல்ல தகுதியற்றவன் என்று கருதவதானல் ஒவ்[illegible] கருத[illegible] நிர்ணயம் செய்து M. L. A. போன்ற பதவி வ[illegible]க 25 வயதுக்குமேலிருக்க வேணுமென்ற வரை செய்யப்பட்டதுபோல் ஒவ்வொரு பதவிக்கும் வரையரையாவது செய்திருக்கலாமே. பதவிக்கு சாதாரணமாய் வயதை நிர்ணயிப்பது தகுதியையளித்துவிடாது என்பது ஒருபுறமிருக்க வயது வந்தவர்கள் அலுத்துசலுத்து சோம்பலும் ஞாபக மறதியும் ஊக்கமும் குறைந்தவர்கள் என்று வாலிபர்கள் எண்ணினால் அதில் ஏதாவது தவறுண்டா? அதுவும் ஒருவாறு நியாயமென்றே ஒத்துக்கொள்ளவே வேண்டியிருக்கிறது.

ஏனெனில் மேலும் அதிக ஞாபக மறதியுடையவர்கள் என்பதோடு பெருவாரியான வயதில் முதிர்ந்தவர்கள் முதிர, முதர சூழ்ச்சியாலும் பலகாலமாய் பழகிவந்த பழக்க வழக்கப்படி சகிப்புதன்மையற்று சூழ்ச்சித்திறனையறிந்தவர்கள் மக்களை ஏய்க்க தந்திரங்களையுணர்ந்தவர்கள் ஆனால் வாலிபர்கள் அப்பழுக்கற்றவர்கள் கண்ணாடி போன்ற உள்ளம் கொண்டவர்கள் மேலும் கொள்கையில் கோட்பாட்டில் உறுதி கொண்டவர்கள் தாங்களே என்று வாலிபர்கள் கூறுவார்களானால் உண்மையாக அதை மறுக்க எந்தவயோதிகர் முன்வரமுடியும். அவ்வாறிருக்க வயதுக்குரிய பதவி ஸ்தாபனங்களில் வரையரை செய்துவிட்ட பிறகு ஏன் மைனர் நீங்கிய 18 வயது முடிந்தவர்களுக்கு ஓட்டுரிமை அளிக்கப்படவில்லை. ஜனத்தொகைஅதிகமாகிவிடும்என்று கருதினால் அது சர்வஜன வாக்குரிமை யளித்துவிட்டதாக எப்படி ஒத்துக்கொள்ளமுடியும் நடுநிலை நின்று சிந்திப்பவர்களானால் வயது முதிர்ந்தவர்கள் கூடிக்கொண்டு அரசியல்நிர்ணய சபையில் செய்துள்ளது ஒருமுகமான நீதியற்றது என்றால் தவறாகுமா? உண்மையாகவே சர்வஜன வாக்குரிமை என்றால் மைனர் நீங்கியவர்கள் வயது வந்தவர்களாகவே கருதப்பட வேண்டுமேயொழிய வேறில்லை அல்லது மைனர்கள் 21 வயதுக்குட்பட்டவர்களென்று வேணுமானாலும் உங்கள் எண்ணத்துக்கு சாதகமாகவாவது திருத்தியிருக்கலாமே அதை விட்டு ஏன் இந்த ஓரவஞ்சனையுள்ள வாக்குரிமை.

வாக்குரிமைக்கு இடம்

இன்று சுதந்திரமடைந்த பின்னர் நாட்டு மக்கள் முன்னேற்றங்கருதி அந்தந்த வகையில் அதாவது நிலச்சுவான்கள், விவசாய உழவர் உழைப்பாளிகள் மற்றைய இன்றியமையாத அத்தியாவசிய தேவைகளுக்குரிய

உணவுமுதல் உடைபோன்ற நாகரீகத்கேற்ப பல சாதனங்களை செய்து தருபவர்கள் நாட்டில் உழுவோர்க்கே உழுநிலம் சொந்தமதென்போம் என்றதற்கொப்ப உண்மையான உழைப்பாளிகளாவார்கள் அவர்கள் இந்நாட்டின் ஜீவநாடிகள் அப்படிப்பட்ட ஒவ்வொருவகை தொழிலுக்கும் மற்றைய முதலுக்கும் உள்ள வகையில் மக்களின் வகைகொண்டு மொத்த பதவிகளில் இன்னின்னவர்கள் இத்தனை ஸ்தானங்கள் வகிப்பதற்குரியவர்கள் என்று பிரிப்பது ஞாயமாகுமே தவிர இனத்தின்பேரால் ஸ்தானம் ஒதுக்குவதும் இடத்தைப் பிரித்து ஸ்தானம் ஏற்பாடு செய்வதும் இடத்திலும் எங்கெந்த இடங்களை எவ்வாறு பிரித்தால் தங்களுக்கு சாதாமாகும் என்று கருதியும் இடம் பிரிக்க ஒரு கக்ஷியினரே தனித்து கூறிய ஆலோசனைகளை கொண்டு மாற்றியோ. மாற்ருமலோ தொகுதியிடங்கள் பிரித்து வைப்பது என்பதும் எவ்வாறு பொருந்தும்.

நாட்டுக்கு சுதந்திரமெனில் அது மக்களுக்கா அன்றி பூமியின இடத்துக்கா? உண்மையாகவே மதச்சார்பற்ற ஒரு சர்க்கார் செய்யவேண்டிய கடமை. உண்டெனில் ஒவ்வொரு நாட்டில் ஜீவநாடியானதும் மக்கள் வாழ்க்கைக்கு இன்றியமையாத தேவையை பூர்த்திசெய்துதரும் தொழில்துரையாளர்களுக்கு குந்தகம் ஏற்படாத வகையில் தொழில்துரை யனுபவவாதிகளுக்கு என ஸ்தானங்கள் ஒதுக்காமல் இனத்தின் அடிப்படையைவைத்து ஸ்தானங்கள் ஒதுக்கி அதிலும் கல்வியில் வாழ்க்கையில் பிற்போக்கிலுள்ள பாமர பாட்டாளிகளுக்கும் ஸ்தானங்கள் ஒதுக்காமலும் வாழ்க்கைதேவைக்காக வேலைசெய்யும் அனுபவம், ஆற்றல், ஆராய்ச்சியுடைய உத்தியோக மண்டலங்களிலுள்ள ஏனையோர்களில் ஆசிரியர்முதல் பலவிததுரையிலும் அனுபவமும் திறனும் பெற்றவர்களை ஒதுக்கித்தள்ளிவிட்டு சர்வாதிகாரமுடைய ஏகாதிபத்தியமுள்ள பழையமுறையிலேயே பன்னுடையால் வடிகட்டும் முறைபோல இளைஞர்களையும் அனுபவமுள்ள தொழில் விவசாயம் போன்றவர்களையும் பிற்போக்கடைந்தவர்களையும் சட்டசபையை எட்டிப்பார்க்ககூட வரவிடாமல் எல்லாவற்றையும் வாங்கிவைத்தான் என்னுடையதை பிடுங்கிடுகொண்டான் என்ற முறைக்கொப்ப தகுதி திறமையுடையவர்களை சம்பளம் வாங்கி உத்தியோகம் பார்ப்பவர்கள் அரசியலில் பங்குகொள்ளஉரிமையற்றவர்களென்ருல் வாதத்துக்காகவே எடுத்துக்கொண்டால் இன்று அமர்ந்துள்ள அமைச்சர்கள் சம்பவக்காரர்களை ஒத்தவர்களல்லவா மாதாமாதம் சம்பளமும் படியும் (படியில் காலணுக்கூட சிலவிடாமல்) எடுத்துக்கொள்ளவில்லையா இவர்கள்பார்ப்பது ஹானரேரியம் போன்றதா இல்லையே ஆகும் சிலவை எழுதிக்கொண்டு சம்பளமில்லாமலிருப்ப தல்லவோ சம்பளமற்றது. மேயர் ஜில்லாபோர்டு, பஞ்சாயத்துபோர்டுபோன்ற ஸ்தாபனங்களின் தலைவர்கள் போலவா ஆகும? இவர்கள் உண்மையாகவே அதற்காகதான் தன்னுடைய சொந்த காரியங்களை பார்ப்பதுபோல் மற்றைய ஆகும் சிலவை எடுத்துக்கொண்டுபார்க்கும் காரியங்கள்களே தேசசேவைக்குரிய லக்ஷணமாகுமே தவிர சம்பளமும் ரகத்தின் உயர்வுக்காக சம்பளத்தையும் உயர்த்திகொண்டு தாங்கள் எந்த பதவிக்கும் தகுதி வாய்ந்தவர்களாகவும் திரமையாக பல காரியங்களை செய்யமுடியாவிடிலும் குறைந்தசம்பளத்தில் வாழ்க்கைத்தேவைக்குமட்டும் வாழ்ந்து பழகியவர்கள் தகுதியும் பெற்றவர்கள் அதற்குரியவராக கூடாது என்பதும் அப்படியானல் தற்காலீக லீவுகூட இல்லாமல் வேலையையே இழந்துவிடவேண்டிய நிலையிலும் செய்துவிட்டு பதவி வகிப்பவர்கள் எத்தனை பதவி வேண்டுமோ வகிக்கலாமென்றுமிருப்பது நேர்மையாகுமா? இதுகள் எதேச்சாதிகாரமல்லவா நாட்டு மக்களின் முன்னேற்றத்தில் அக்கரை கொண்டவர்களானல் வள்ளுவர் கூறியபடி

"ஒத்த தறிவானுயிர் வாழ்வான் மற்றையான்
செத்தாருள் வைக்கப் புடும்"

என்பதற்கொப்ப நாட்டுக்கும் மக்களுக்கும் தற்கொலைக்கொப்பாகும், ஆகையால் இன்ன செய்யாமை

"எனைத்தானு மெஞ்ஞான்றும் யார்க்கு மனத்தானு
மாணு செய்யாமை தலை"

என்பதற்கேற்ப சிந்தித்து செய்தலே சாலச்சிறந்தது இடத்தால் பிரிப்பது நலந்தராது.

ஜமீன்தாரி ஒழிந்தது

F. G. 12-12-50ல் வெளியிட்ட 3279 to 3284

நாம் நெடுநாளாய் எதிர்பார்த்த ஜமீன்கள் ஒழிப்பு முடிந்து 3—1—51 தேதி சென்னை. திருச்சிராப்பள்ளி, செங்கல்பட்டு. வடஆற்காடு, தென்ஆற்காடு, தஞ்சை, கோயம்புத்தூர், மதுரை, நெல்லூர், குண்டூர், இராமநாதபுரம், கிழக்கு கோதாரி. கிருஷ்ணு. சித்தூர், திருநெல்வேலி முதலிய ஜில்லாக்களிலுள்ள ஜமீன் கிராமங்களில் சர்க்கார் நேரடியாய் நிர்வாகம் ஏற்றுக்கொள்ளப் படுகிறதென்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்வதோடு இந்நிகழ்ச்சிக்குரிய முக்கிய பங்குகொண்ட சர்க்காரை பெருமிதத்தோடு பாராட்டுகிறோம்.

ஃ ஃ ஃ

வடநாட்டு சுரண்டலின் தடுப்பு.

உ. தா. திராவிடக் கழகத்தாரின் பங்குக்கு அச்சாரமாக ஆண்டிபட்டாக்காடு தோழர் கே. பி. தங்கவேலு அவர்கள், பி. முருகையன், மு. சுந்திரராசன், கல்லாத்தூர் வி. ராமலிங்கம். வாரியங்காவல் ஆர். சுந்திரம், முதலியவர்கள் மறியல்செய்து சிறைசென்ருர்கள். இன்னும் ஏராளமானவர்கள் மறியல்செய்ய சமயத்தை எதிர்நோக்கியுள்ளார்கள்.

தமிழ் வளர்ச்சியில் ஆர்வமுள்ள ஒவ்வொருவரும் "பொய்யாமொழி" யின் சந்தாதாரராகச் சேர்ந்து வளர்ச்சியடையச் செய்யுங்கள்!

யாருக்கு உரியது...?

(தி. மா. பரமசிவம்)

மந்திரி பதவி யாருக்கு உரியது? ஆட்சிபீடம் யாருக்கு உரியது? என்றசண்டை ஓயாதிருக்கும் இந்நாளிலே இம்மாதிரி ஒரு தலைப்பைக் கண்டதும் அன்டர்கட்கு வியப்பு உண்டாவது இயல்பே.

"பாடு படும் தோழர் தமக்கே இவ் உலகம் பாத்தியம்" என்று வெளிப்படையாகக் கூறுவதற்குத் துணிவு இல்லாவிட்டாலும்—பெரும்பாலான உழைப்பாளி உள்ளங்களில்—உழவர்களின் எண்ணங்களில் இந்தக்கருத்து எதிரொலி செய்திருக்கிறது என்பதை எவரும் மறுக்க முடியாது.

உழுபவனுக்கே நிலம் சொந்தம் என்பதும், உழைப்பவனுக்கே உரிமையுடையது இவ் உலகம் என்பதும் புதிதாக வேற்று நாட்டிலிருந்து வந்த கொள்கைகள் என்று சிலர் மயங்குகின்றனர்.

தமிழ் இலக்கிய பழம் பெருநூல்களை நுணுகி அறிவார் எவரும், "இக்காலத்துப் புதுக்கருத்து" போல மேலை மொழிகளில்வரும் நுட்பங்கள் தமிழிலே அமைந்திருப்பதைக் காண்பர்.

திருக்குறளை ஒரு வாழ்வியல் நூல் என்று கருதும் அறிஞர்கட்கு இத்தகைய பேருண்மை விளங்கவே செய்யும். புதுமை நோக்கம் கொண்டு நாமும் ஒரு குறட்பாவை ஆராய்வோம்.

இரண்டாயிரம் ஆண்டுகட்குமுன்பே, ஆசிரியர் வள்ளுவனுருக்கு இவ் உலகம் யாருக்கு உரிமையாதல் வேண்டும் என்ற சிந்தனை எழுந்தது இதுபற்றி மற்றையவர் கருத்தை அறியவும் விரும்பிய அவர் ஒரு மாநாடு கூட்டினுர் என்றே வைத்துக்கொள்ளுவோமே.

மாநாடு தொடங்கியது. பின்வருமாறு வந்திருந்தோர் பலரும் கருத்தை வெளியிட்டனர்.

மதவாதிகள்:- நாங்கள் 'பரம்' பொருளின் திருவிளையாடலை மக்களுக்கு விளக்கிக்கூறி, அவர்களை இவ் உலக வாழ்வைப் பொய் என்று உணர்த்தி அவர்கட்கு உண்மை உணர்த்துகின்றோம். ஆகவே இந்த நில உலகம் எம்மைச்சார்ந்தது.

வள்ளுவர்:- நீங்கள்தான் இவ்வுலகைப் பொய் என்கின்றீர்களே! பொருளே பொய்என்றால் உரிமை கொள்ள எங்ஙனம் இயலும்?

மன்னர்கள்;- பிறமன்னர்கள் தாக்குதலுக்கு இவ்உலகம் இரையாகாமல் போர்தொடுத்துக் காப்பவர்கள் நாங்கள். எங்களுக்கே........

வள்ளுவர்:- தாக்குதலைத் தடுக்கப்போர்? நீங்கள் தாக்குதலைச் செய்யவும், போர் தொடுக்கவுமே பயின்றவர்கள். அழிப்பவர்கட்கு உலகம் உரிமையாகாது.

வணிகர்:- நாட்டின் பொருளில் எங்களாலே உண்டாகின்றது. வேறுபல நாட்டினுக்கும்சென்று பொருளைத் தேடி வந்து சேர்க்கின்றோம். பொருள் இல்லார்க்கு இந்த உலக வாழ்வு அமையாதுஎன்று தாங்களே சொல்லுவீர்கள்.

வள்ளுவர்:- நீங்கள் வேற்று நாட்டுக்குச் சென்று பொருள்தேடப் போகின்றீர்கள். ஆனால் உங்களைப் போன்ற வணிகர் பலர் வேற்றுநாட்டிலிருந்து வந்து இங்குள்ள பொருளைக்கொண்டு செல்லுகிறார்கள் என்பதை மறந்துவிட்டீர்கள். பொருளைத்தேடினால் மட்டும் போதாது பொருளினால் எதை ஆக்கவேண்டும் என்பதை உணரவேண்டும்.

மதமென்றும், மேல்உலகப் பதமென்றும் கூறி மருட்டியும், போர்என்றும், வரி என்றும்கூறி மக்களை வாட்டியும். பொருள் என்றும், பொன் என்றும் கூறிப் பிறரை ஏய்த்தும் வாழ்பவர்கள் உலகுக்கு உரிமையுடையவர்கள் அல்லர்.

இந்தமாநாட்டில் எல்லோரும்வந்து தங்கள்கருத்தை அறிவிக்குமாறு அழைப்பு விடுத்தேன். தாங்கள் அனைவரும் வந்தீர்கள், நன்றி, ஆனால் யார் உழைப்பவர்களோ யார் உரிமை உடையவர்களோ அவர்கள் இங்கு வரவில்லை,

இந்தக்கடுமையான வெயில் வேளையிலும் சிலர் கல் உடைத்துக்கொண்டிருக்கின்றார்கள். சிலர் வானளாவ எரியும் தழலில் இரும்பை உருக்கிக் கொண்டிருக்கின்றார்கள், சிலர் ஏர் உழுது கொண்டிருக்கின்றார்கள்.

இவர்களனைவரும் தமது செயல் சிதைவுறாமல் கண்ணுங்கருத்துமாய் ஆக்கப்பணிபுரிகின்றனர். இவர்கள் பெறுகின்றபயன் அரைவயிற்று உணவுதான். இத்தகைய கடமை உணர்ச்சிமிக்கவர்க்கே உலகம் உரிமையுடையதாகும்.

இவ்வாறு வள்ளுவர் கூறினர் அத்தனைபேரும் அந்தக்கருத்தை ஒப்புக்கொள்ளவில்லை. ஆனாலும், வள்ளுவர் தமது கருத்தே உண்மையானதென்று வற்புறுத்தினர். இதோ அந்தக்குறள்:

> "கருமம் சிதையாமற் கண்ணோட வல்லார்க்கு
> உரிமை உடைத்து இவ்உலகு"

புதுமைக் கருத்துமிளிரும் இந்த குறள் மணியை ஆழ்ந்து படிப்பவர் உள்ளத்தே மேற்கூறிய அத்தனைக் கருத்தும் நன்கு புலனாகும்.

வாழ்க உழைப்பவர்! வெல்க அவர்தம் உரிமை!!

தொடர் நாடகம் — கற்பனை சித்திரம்

துரோகி?

★ கதை, வசனம்: கு. ஆண்டிய... சு. இராமமூர்த்தி. ★

குறிப்பு:— இந்நாடகத்தை நடிக்கவோ, அச்சிடவோ ஆசிரியரின் அனுமதியின்றி எதுவும் செய்யக்கூடாது.

இதில்வரும் பெயர்கள், சம்பவங்கள் யாவும் கற்பனையே தனிப்பட்ட எவரையும் தாக்கிடுவது அல்ல.

—: உறுப்பினர்கள் :—

1. செல்வமணி (தாய்-தந்தை அற்றவன்) — சீர்திருத்தவாதி (தர்மலிங்க முதலியாரின் மருமகன்)
2. சுந்தரம் ” — செல்வமணியின் நண்பன் (வாணி சகோதரன்)
3. மோகன் — செல்வமணியின் நண்பன்
4. பாஸ்கரன் — செல்வமணியின் நண்பன்
5. தர்மலிங்க முதலியார் — தனவந்தர் (செல்வமணியின் தாய் மாமா)
6. குமார் — முதலியாரின் பண்ணை மானேஜர்
7. திருப்பதி — முதலியாரின் வீட்டு வேலையாள்
8. வைத்திலிங்கம் பிள்ளை — முதலியாரின் நண்பர்
9. காந்தா (தாயற்றவள்) — முதலியாரின் ஒரே செல்வப்புதல்வி
10. வாணி — சுந்தரம் தங்கை (விதவை)
11. கருப்பன் — திருப்பதியின் நண்பன்
12. வள்ளி — கருப்பன் மனைவி

தந்தி சேவகன் — தபால்காரன் — பொதுஜனங்கள் மற்றும் பலர்.

-O-

நிகழும் இடங்கள்:

சிதம்பரம் — புத்தூர் — செங்கமேடு — புதுவிளாகம் — பாப்பே முதலியன.

திரை 1.

காலம் மாலைவேளை

இடம்:- புத்தூர் வள்ளுவர் சமூகம் — பொதுமேடை சுந்தரம் தலைமை வகித்து முன்னுரை மொழிதல்.

(கழகத்தார் மாலை அணிவித்தல் — மக்கள் கைதட்டல்)

சுந்தரம்: (எழுந்து) வணக்கம்! என்னை தலைமை வகிக்குமாறு கேட்டுக்கொண்ட வள்ளுவர் கழகத்திற்கு என் உள்ளம் உவந்த நன்றி உரித்தாகுக. அன்புமிக்க தோழர்களே! புத்தூரில், இக்கழக திறப்பு விழாவை ஒற்றுமையுடன் நீங்கள் அனைவரும் இருந்துஆரம்பித்ததற்கு மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். நிகழ்ச்சி நிரலில் கண்டபடி, அருமை நாட்டின் பெருமை காக்க, எத்தனையோ இடையூறுகளுக்கிடையில் சமுதாயத் தொண்டில் தன் வாழ்வை தன்னலமற்று தான் கொண்ட கொள்கையை நாடெங்கும உரைத்துவரும் சீர்திருத்த உள்ளங்கொண்ட நண்பர் செல்வமணி அவர்கள் “தாழ்வுற்ற சமுதாயம்” என்ற பொருள் பற்றி பேசுவார்,

(செல்வமணி எழுந்து பேச ஆரம்பித்தல்.)

மாலை போடல் — மக்கள் கை தட்டல்.

செல்வமணி:- தன்மானத் தோழர்களே! என் நாட்டு இளஞ் சிங்கங்களே! வணக்கம். என்னைப்பற்றி நண்பர் சுந்தரம் ஏதேதோ சொன்னார் புகழ்ச்சிக்கு உகந்தவன் அல்ல நான். இந்நிலையில் பலருடைய இகழ்ச்சிக்கு உரித்தவனாக இருக்கிறேன். ஏன்? கேள்வியல்ல, கேடடைந்த இந்த சமுதாயம் சீரும் சிறப்புடன் செழிப்புற்றிருந்தது. வளமையாக வாழ்ந்தமக்கள் தான் நாம். அந்நிலை மாறியதால்தான் மாறிப்போன சமுதாயத்திற்கு புதுமாற்றம் வேண்டும் என பாடுபடும் என்னைப்பற்றி இவ்விதமாக இகழ்கிறார்கள். மூவேந்தர் முரசு கொட்டி வாழ்ந்துவந்த நாடுதான் இது, முறையுடனே வாழ்ந்த மக்கள் இன்று தாழ்ந்துபோனதற்குரிய காரணம் நம்மில் ஒற்றுமையில்லை. “ஒன்றுபட்டால் உண்டுவாழ்வு” என்று பாரதியார் எண்ணத்தில் எழுந்த எழுத்தை சொல்லுகிறோமே தவிர அவர் எண்ணத்தை ஈடேற்றவில்லை நாம்.

— தொடரும்.

ஊரார் உரையாடல்: ... ... சுயேச்சையும், காங்கிரசும்.

:: ஜில்லா போர்டும் - சட்டசபையும் ::

காங்கிரஸ் குமரன்: என்னப்பா சுயேச்சை க[illegible] ஜில்லாபோர்டுக்கு உங்கள் ஆள்களை தேர்ந்[illegible] தால் என்னென்னமோ செய்துவிடுவே[illegible] சொன்னீங்களாமே ஓட்டர்களிடம்.

சுயேச்சை கந்தன்: அப்பா வாப்பா குமரப்பா அப்படி நான என்ன நீங்கள் சொன்னதைப்போல் ஒன்றும் பிரமாதமாய் சொல்லிவிடவில்லையே மேலும் ஜில்லாபோர்டில் எங்களுக்குள்ள அதிகாரம் என்ன என்று நான் எங்களுக்குத்தெரியுமே நாங்கள் என்ன பிரமாதமாய் செய்துவிட முடியும். நாங்கள் செய்வது அங்கு ஒன்றும் அவ்வளவு பிரமாதமாய் மக்களுக்கு அன்ருட தேவைக்கான காரியம் ஒன்றுமில்லையே.

காங்கிரஸ் குமரன்: ஒன்றுமில்லையா என்னமோ புள்ளம்பாடி வாய்க்காலைகூட வெட்டி அப்படியே கைகாட்டியோடெ தெற்கே போகப்போறதை நேரே கிழக்கேதிருப்பிவிட்டுடுவம்னு ஓட்டர்கிட்டே சொன்னீங்களாமே.

சுயேச்சை கந்தன்: ஓங்களுக்கு ரொம்ப ஞாபகமறதியப்பா, நீங்கள் முன்னே 1946லே காங்கிரசுலே ஊடுஊடாய் போய் ஓட்டுக்கேட்டீங்களே அப்ப இல்லப்பா அப்படியெல்லாம் சொன்னீங்க. எங்களுக்கு அந்த அதிகாரமெல்லாந்தாம் இல்லையேப்பா. நாங்க எப்படிப்பா சொல்லமுடியும் ஓம் புளுகுபாரு நீ என்னமோபெரிய அரசியல்வாதின்னு ஊரெல்லாம் நீயும் [illegible]ால்லுகிறே சில ஜனங்களும் அப்படியே முன்னே நம்பினுங்க ஒனக்கு யார்யாரு எதை எதைச்செய்யமுடியும்னுகூட தெரிஞ்சுக்காமே புளுகிறீயே. ஓங்க புளுவெல்லாந்தான் இப்ப ஜனங்க நல்லா புரிஞ்சிக்கிட்டாங்களே, சுதந்திரம் வர்ரத்துக்கு முன்னே எல்லாம் எதுக்கும் கொஞ்சம் சங்கடம் ஏற்படும்னு நீங்களா பிரளிபண்ணி அதெல்லாம் வெள்ளைக்காரன்மேலேயே பழிசால்லி, கொண்டு போயிட்டான்னு ஜனங்க கிட்டே சொன்னீங்கோ 16 அவுன்ஸ் ரேஷன் வெள்ளைக்காரன் காலத்திலே கொடுத்தப்ப கொஞ்சம் கோதுமை சேர்த்துக்கொடுத்தா, இது என்ன குதிரைக்கி வைக்கிறெ கோதுமையை மனுசனைத் திங்கச்சொல்ருன் இந்த வெள்ளையன் தொலைஞ்சால் தான் தேவலை அப்பத்தான் ஜனங்கள் நிம்மதியாய் ஒவ்வொருத்தரும் வேணுமங்கரே சாமானெல்லாம் வேணுமுங்கற வரையிலே சாப்பிடலாமுன்னு சொன்னீங்க கையிலே ஒரு கத்தி வைச்சிக்கோகூட இந்த வெள்ளைக்காரச் சர்க்காரு விடமாட்டேங்கிரும் பாருங்கண்ணு சொல்லிட்டு இப்போ நீங்க கையிலே க்ஷவரம் செய்யக்கூடிய கத்தி தையக்கடைக்காரனைக் கூட கத்திரிகோல் வைச்சிக்க லைசென்சு கேட்டா தேவலாம்னு நினைச்சிக்கிட்டே இடக்கிறீங்களாமே பொருபோவது சண்டை சமயத்திலே அதிலியும் வெளிநாட்டிலேயிருந்து உணவுதானியம் வந்தா அந்த ஹிட்லர் குண்டைப்போட்டு அந்தக் கப்பலே முழுகடிச்சி சங்கடம் உண்டாக்கின காலத்திலேகூட 16 அவுன்சு கொடுத்தாங்க. சண்டை தெருத்தெருவாய் நடந்து பயிரெல்லாம் எரிச்சுட்ட தேசத்திலே யிருந்தெல்லாம், அவுங்க நாட்டுக்கு தேவைக்குப்போக வெளிநாட்டுக்கெல்லாம் தர்ருங்கிருங்க. இங்கென்ன

(இப்படி குமரனும் கந்தனும் பேசிக்கிட்டே யிருக்கச்சே)

சுட்டிப்பயல் ஓடிவந்து சும்மாகிடங்கப்பா போதும் நீங்ககிழிச்ச கிழியெல்லாம் போனவாரம், அதற்குமுன் வாரம் 3 நாளைக்கு கொடுத்தாங்க. இப்போ 2 நாளைக்கு முன்னுலே போரவங்களுக்குத்தான் கிடைக்குமாம். நாலுநாளா பட்டினி இவனுவளுக்குவேறே வேலையில்லாமே கிழிச்சமாதிரி பேசுருங்க. —வீரன்.

தொடரும்.

கிராம பஞ்சாயத்துபோர்டு பிரசிடெண்ட்டுகளுக்கு வேண்டுகோள்.

ஆங்காங்குள்ள கிராம பஞ்சாயத்து போர்டுகள் தங்கள் எல்லைக்குட்பட்ட கிராமரோடுகளை பராமரிக்க தங்கள் போர்டில் பொருளாதாரம் போதாமலிருப்பதை தெரிந்தும் பேசாமலிருக்கிறீர்கள். ஆதலால் கிராமவாசிகளுக்கு வண்டிகள் போக்குவரத்துக்கு அசௌகரியமாயிருப்பதால் ஒவ்வொரு கிராம பஞ்சாயத்து போர்டிலும் அடியில்கண்டபடி தீர்மான ரூபமாக [illegible] போர்டுக்கு அனுப்பவும்

பஞ்சாயத்து போர்டிலுள்ள இ[illegible]மல் வரையுள்ள ரோடை பராமரிக்க போ[illegible]ண வசதி எங்களிடம் குறைவாகயிருப்பதால் ஷெ[illegible]டை ஜில்லாபோர்டு பராமரிப்பின்கீழ் எடுத்துக்கொண்டுஷெ ரோடுகளை கப்பி போட்டு சீர்திருத்தம் செய்து கொடுக்க வேணுமாய் (சம்மந்தப்பட்ட) ஜில்லா போர்டாரை இந்த பஞ்சாயத்து போர்டு கேட்டுக்கொள்ளுகிறது.

மேலும் விபரம் தேவைப்படுபவர்கள் ஆசிரியரை கடிதமூலமோ நேரிலோ கேட்டு தெரிந்துக்கொள்ளலாம்.

ஃ ஃ ஃ

திறந்த மடல்.

குறிப்பாக உடையார்பாளையம் தாலூகாக்களில் புதிதாக ஏற்பட்ட போஸ்ட் ஆபீசுகளில் குறிப்பாக உட்கோட்டை போஸ்ட் ஆபீசுக்கு 1 மைல் 2 மைல்களுக்குட்பட்ட ஆயிரக்கலவன் போன்ற கிராமங்களை உட்கோட்டையில் சேர்க்காமல் லோயர் அணைக்கட்டில் இணைத்திருப்பதால் சுமார் 3½ மைலுக்குமேலாகி தினசரி, வாரஇதழ்கள் அவ்வப்போது கிடைக்கவில்லையென ஆயிரக்கலவன் கிராமவாசிகள் குறைசொல்லுகிருர்கள். ஆகையால் சம்பந்தப்பட்ட போஸ்டல் ஜில்லா சூப்ரெண்டெண்ட் அவர்களும் ஆவனச்செய்வார்களென எதிர்பாக்கிரும்.

திருத்தம்: 5-ம் பக்கம் வடநாட்டு சுரண்டலின் தடுப்பு என்ற தலைப்பில் 3-வது வரியில் மு. சுந்திரராசன் என்றிருப்பதை நீக்கி வாசிக்கவும்—ஆசிரியர்.

Printed by A. P. Ramaswami Pillai at the Sri Rathna Press, (Branch) Jayankondacholapuram.
Edited and Published by M. Bhaskarahar, 17, Katcheri Street, Jayankondacholapuram.

225284